தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

சனிக்கிழமை, 1982 மார்ச், 27

பங்குனி 14, துன்மதி, திருவள்ளுவர் 2013.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் மாண்புமிகு திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு.''

ஒருவரை இகழ்ந்து பேசுதல் விளையாட்டிலும் துன்பம் தருவதாகும். பிறருடைய இயல்பை அறிந்து நடப்பவர் இடத்தில், பகைமையிலும் நல்ல பண்புகள் உள்ளன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் *உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்]

1. அரசினர் சட்ட முன் வடிவுகள்.

(அ) உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலையையும் பணி நிபந்தனைகளையும் முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு 1982.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே தமிழ்நாடு 1982ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலையையும் பணி நிபந்தனைகளையும் முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இச்சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஆ) தொழில் தகராறுகள் (தமிழ்நாடு திருத்தம்) சட்ட முன்வடிவு 1982.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, 1982ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் (தமிழ் நாடு திருத்தம்) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

128 55—1

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்ற பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(இ) நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு 1982.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''தமிழ்நாடு 1982ஆம் ஆண்டு நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு *(சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 22/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''தமிழ்நாடு 1982ஆம் ஆண்டு நிதி ஒதுக்க சட்டமுன்வடிவு சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/1982) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவு 2, அட்டவணை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1982ஆம் ஆண்டு நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1982) நிறைவேற்றப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

---

*1982 மார்ச் 25ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS